# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், நள்ளிரவு நேரத்திலும் ஓடோடிச் சென்று - கவரைப்பேட்டை ரயில் விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் கூறி - நிவாரண நடவடிக்கைகள் மேற்கொண்ட காட்சி!



திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், கவரைப்பேட்டை இரயில் நிலையம் அருகில் நேற்று முன்தினம் (11.10.2024) இரவு லூப் லைனில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சரக்கு இரயில் மீது பாக்மதி அதிவிரைவு பயணிகள் இரயில் மோதிய விபத்தில், காயமடைந்தவர்கள் சிகிச்சை பெற்று வரும் சென்னை, ஸ்டான்லி மருத்துவமனைக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேரில் சென்று, காயம் அடைந்தவர்களுக்கு ஆறுதல் கூறி, அவர்களுக்கு அளிக்கப்பட்டு வரும் சிகிச்சை விவரங்கள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தார். உடன் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர் இரா. மூர்த்தி, துணை முதலமைச்சரின் கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், ஆகியோர் உள்ளனர்.



திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், கவரைப்பேட்டை இரயில் நிலையம் அருகில் நேற்று முன்தினம் (11.10.2024) இரவு லூப் லைனில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சரக்கு இரயில் மீது பாக்மதி அதிவிரைவு பயணிகள் இரயில் மோதிய விபத்தில், காயமடைந்தவர்கள் சிகிச்சை பெற்று வரும் சென்னை, ஸ்டான்லி மருத்துவமனைக்கு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேரில் சென்று, காயம் அடைந்தவர்களுக்கு ஆறுதல் கூறி, அவர்களுக்கு அளிக்கப்பட்டு வரும் சிகிச்சை விவரங்கள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தார். உடன் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர் இரா. மூர்த்தி, துணை முதலமைச்சரின் கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், ஆகியோர் உள்ளனர்.



திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், கவரைப்பேட்டை இரயில் நிலையம் அருகில் நேற்று முன்தினம் (11.10.2024) இரவு லூப் லைனில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சரக்கு இரயில் மீது பாக்மதி அதிவிரைவு பயணிகள் இரயில் மோதிய விபத்தில், காயமடைந்தவர்கள் சிகிச்சை பெற்று வரும் சென்னை, ஸ்டான்லி மருத்துவமனைக்கு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேரில் சென்று, காயம் அடைந்தவர்களுக்கு ஆறுதல் கூறி, அவர்களுக்கு அளிக்கப்பட்டு வரும் சிகிச்சை விவரங்கள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தார். உடன் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர் இரா. மூர்த்தி, துணை முதலமைச்சரின் கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ் ஆகியோர் உள்ளனர்.



திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், கவரைப்பேட்டை இரயில் நிலையம் அருகில் நேற்று முன்தினம் (11.10.2024) இரவு லூப் லைனில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சரக்கு இரயில் மீது பாக்மதி அதிவிரைவு பயணிகள் இரயில் மோதிய விபத்தில், காயமடைந்தவர்கள் சிகிச்சை பெற்று வரும் சென்னை, ஸ்டான்லி மருத்துவமனைக்கு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேரில் சென்று, காயம் அடைந்தவர்களுக்கு ஆறுதல் கூறி, அவர்களுக்கு அளிக்கப்பட்டு வரும் சிகிச்சை விவரங்கள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தார். உடன் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர் இரா. மூர்த்தி, துணை முதலமைச்சரின் கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ் ஆகியோர் உள்ளனர்.

### திருவள்ளூர் மாவட்டம் – கவரைப் பேட்டையில் ரயில் விபத்து:

## மீட்புப் பணிகளை தொடர்ந்து கண்காணித்து வருகிறேன்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

**சென்னை.அக்.13-**

**திருவள்ளூர் மாவட்டம் - கவரைப்பேட்டையில் இரயில் விபத்து நடந்ததையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள வலைதளப் பதிவில், “மீட்புப் பணிகளைத் தொடர்ந்து கண்காணித்து வருகிறேன்” என்று குறிப்பிட்டுள்ளார்.**

முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

திருவள்ளூர் மாவட்டம் கவரைப்பேட்டையில் இரயில் விபத்து நடந்ததை அறிந்து அதிர்ச்சியடைந்தேன்.

தகவல் கிடைக்கப் பெற்றவுடன், அமைச்சர் சா. மு. நாசர் அவர்களையும் மற்றும் மாவட்ட ஆட்சியர் உள்ளிட்ட அரசு அதிகாரிகளையும் விபத்து நடந்த இடத்திற்குச் செல்ல உத்தரவிட்டேன்.

மீட்பு மற்றும் உதவிப் பணிகளில் அரசு துரித மாகச் செயல்பட்டு வருகிறது. இவ்விபத்தில் காயமடைந்தவர்கள் உடனடியாக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்படுகிறார்கள். மற்ற பயணிகளுக்குத் தேவையான உணவு, அவர்கள் ஊர் திரும்புவதற்கான பயண வசதிகள் ஆகியவற்றை ஏற்பாடு செய்வதற்கெனத் தனியே ஒரு குழு இயங்கிக் கொண்டிருக்கிறது.

விபத்துக்குள்ளான இரயில் பெட்டிகளை அகற்றும் பணியில் தீயணைப்புத் துறையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

மீட்புப் பணிகளைத் தொடர்ந்து கண்காணித்து வருகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



அயலக தி.மு.க. குவைத் சார்பில் முரசொலி செல்வம் அவர்களின் மறைவிற்கு இரங்கல் தெரிவிக்கும் கூட்டம் நடைபெற்றது. புதுக்கோட்டை பஷீர் தலைமையில் நடந்த இரங்கல் கூட்டத்தில். ஆலஞ்சியார், பத்தமடை க.சிந்தாபக்கீர், தளபதி பேரவையின் செல்வம்’. விசிகவின் அழகர்சாமி, மகிழன் செல்லதுரை, மக்கள் சேவை மையம் அலிபாய் உதவும் கரங்கள் மஜீது, வாழ்வுரிமைக்கட்சி தமிழன் சாகுல், அம்மையப்பன், செல்வம்,கலகலப்பு சரவணன், ஜியாவுதீன் மற்றும் பலர் முரசொலி செல்வம் அவர்களை நினைவு கூர்ந்தனர். இக்கூடடத்தில் காட்டூர் ஆறுமுகம், சையத் முஸ்தபா, அறிவுமணி, பாஞ்சி பீர், காட்டுபாவா, முனசந்தை சிக்கந்தர். கறம்பங்குடிஜாபர் சாதிக், கொளத்தூர்கனேஷ், கொடவாசல் சதாம்உசேன், தச்சன்குறிச்சிஜான்பாஷா, மஜகவினர் மற்றும் பல்வேறு தமிழ் அமைப்பை சேர்ந்த தோழர்கள் கலந்துகொண்டு புகழஞ்சலி செலுத்தினர்.

### கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு

## திருப்பத்தூரில் வடமாடு மஞ்சுவிரட்டு!

### அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் துவக்கி வைத்தார்!

சிவகங்கை. அக்.13-

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் ஒன்றிய, பேரூர் கழகம் மற்றும் அனைத்து அணிகளின் சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு வடமாடு மஞ்சுவிரட்டு; நடைபெற்றது. மாவட்ட கழக செயலாளரும், கூட்டுறவுத் துறை அமைச்சருமான கே ஆர். பெரிய கருப்பன் தலைமையேற்று வடமாடு மஞ்சுவிரட்டினை துவக்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சிக்கு ஒன்றிய செயலாளர் எஸ். சண்முக வடிவேல், விராமதி மாணிக்கம் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

இந்த வடமாடு மஞ்சுவிரட்டில் சிவகங்கை, புதுக்கோட்டை ,மதுரை,மேலூர் மற்றும் பல்வேறு ஊர்களிலிருந்து மாடுபிடி வீரர்கள் பங்கேற்றார்கள். நிகழ்ச்சியில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் நாகனி செந்தில் குமார், பொதுக்குழு உறுப்பினர் பி. ஆர் . பெருமாள் மற்றும் ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள். வடமாடு மஞ்சுவிரட்டு விழா ஏற்பாடுகளை செ .தமிழ் நம்பி, ஜான் கென்னடி, முத்துக்குமார் ,கா. சோமு, தனபால், தங்க வேல், ஜக்காரியா, சிவா, ராஜேஷ், கார்த்திக், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் முகமது கனி, ஆகியோர் செய்து இருந்தார்கள்.

## ‘வாட்ஸ் அப்’பில் வலம் வரும் செய்தி!

